திரு. கோ. சி. மணி : வெளிச் சந்தையின் விலைக்குத்தான் இந்த நெல் விற்கப்படுகிறது என்று நினைக்கிறேன். கம்பெனியிலே பணியாற்றுகிறவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு அடக்கவிலை என்று நிர்ணயம் செய்து அந்த அடக்க விலைக்கு அவர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். அதைப் போலவே நெல்லை உற்பத்தி செய்கிற இவர்களுக்கும் அடக்கவிலை நிர்ணயம் செய்து, சலுகை காட்டி, குறைந்த விலையில் நெல்லைத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனையின்படிதான் 1976-77-ல் கிலோ ஒன்றுக்கு 80 பைசா விதம் அவர்களிடத்திலிருந்து விலை பெற்றுக்கொண்டு நெல் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அது பற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: இந்தச் சலுகை மாநிலத்தில் இருக்கின்ற இதர நெல் ஆராய்ச்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால், எந்தெந்த ஆராய்ச்சி நிலையங்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எல்லா ஆராய்ச்சி நிலையங்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. கொடுக்கப்படாத ஆராய்ச்சி நிலையங்களுடைய குறிப்பு என்னிடம் இல்லை.

Commission to go into Economic Conditions of Agriculturists.

* 148 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to constitute a Commission to go into the economic conditions of the agriculturists in the State; and

(b) if so, the details thereof?

விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்ய ஆணைக்குழு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்ய ஆணைக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1978 பிப்ரவரி 27]

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (இ) இம்மாநில உழவர்களின் பொருளாதார நிலையை ஆராய்ந்திட ஓர் ஆணைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நம் நாட்டினுடைய பொருளாதார வாய்ப்புகளை ஆய்வு செய்வதற்காக புதிய மத்திய அரசு முன் வந்து பல்வேறு கமிஷன்களைப் போட்டிருக்கிறது. அதுபோலவே தமிழகத்தில், குறிப்பாக ஏழை விவசாயிகளுடைய பொருளாதார மேம்பாடு குறித்து ஆய்வு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவசாயிகளுடைய முக்கியமான கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக, ஏற்கனவே ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. முக்கியமான கோரிக்கைகளை அந்தக் குழு ஆராய்ந்து வருகிறது. பொருளாதாரத்தின் அடிப்படையில் ஆராய என்று ஒரு குழுவை அமைக்கும் உத்தேசம் தற்போது இந்த அரசிடம் இல்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: விவசாய நிலங்களில் சாகுபடி செய்யக் கூடிய பயிர்களின் சர்வே செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தற்போது விவசாய நிலங்களில் என்னென்ன சாகுபடி செய்யப்படுகிறது என்பதை ஆராய அரசு முன்வருமா? இனவாரியாக, எங்கெங்கு, எவ்வளவு எவ்வளவு என்று ஆராய்ந்து தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வி, விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்திட ஆணைக் குழு அமைப்பதுபற்றி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விளைகின்ற பயிர்களின் நிலைபற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: விவசாயிகள் சம்பந்தமாக அரசு அமைத்திருக்கிற குழுவைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த யாராவது இடம் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தஞ்சையைச் சேர்ந்த திருவாரூர் தென்கோவன் என்பவர் அக்குழுவில் இடம் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தஞ்சையைச் சேர்ந்த விவசாயி இருக்கிறாரா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அவர் தஞ்சையைச் சேர்ந்த விவசாயிதான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அவரை அரசியல்வாதியாகத்தான் பார்த்தேன். விவசாயியாகப் பார்க்கவில்லை.

திரு. ஜார்ஜ் கோமகன்: அந்தக் குழுவில், சாப்பிடுபவர்களும் (கன்ஸ்யூமர்ஸ்) (consumers) இடம் பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தக் குழுவில் அவர்கள் இடம் பெற முடியாது. ஏனென்றால் விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றித்தான் அதிலே ஆராயப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: இக்குழுவில் விவசாயிகளின் பொருளாதாரத்தை ஆராய்வதைவிட, இடையிலே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற கடன் சுமையை ஆய்வு செய்து விரைவிலே அதுபற்றி ஒரு அறிக்கையை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கூடுமான அளவிலே விவரமான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்குண்டான ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: அந்த அறிக்கை வருவதற்குள், அவர்களுடைய கடன் சுமையைப்பற்றி மட்டும் ஆராய்ந்து ஒரு தனி அறிக்கையை வைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவசாயிகளுடைய ஒட்டு மொத்தப் பிரச்சினைகளில், கடன் சுமைப் பிரச்சினையும் ஒன்று. ஆகவே தனிப் பட்ட ஒரு பிரச்சினையை மட்டும் எடுத்துக்கொண்டு ஆய்வது சரியாகாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். ஆனாலும் தனியாக இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்தக் குழு ஒட்டு மொத்தமாகப் பிரச்னைகளை ஆராயும் போது அதிலுள்ள ஒவ்வொன்றையும் ஆராய்ந்து ஒட்டு மொத்தமாக ஒரு அறிக்கையை அளிக்கவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

முதலமைச்சர் அவைக்கு வராமை குறித்து.

(பிற்பகல் 11-10)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை நடைபெறுகின்ற நேரங்களில் பெரும்பாலும் முதலமைச்சர் அவர்கள் வருவதில்லை. அவர்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளில் விளக்கங்களை உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென்றாலுங்கூட, அவரிடம் உள்ள ஒரு இலாகா கேள்விகள் கூட எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. பொதுத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, அறநிலையத் துறை பற்றிய கேள்விகள் கேட்க முடியவில்லை. ஆகையால் முதலமைச்சர் அவர்கள் இங்கே வருவதற்கு அவைத் தலைவராகிற தாங்கள் ஏற்பாடு செய்து அவருக்கான கேள்விகள் இந்த அவையில் வருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் வரவில்லையென்றால், அவருக்காகப் பதில் சொல்லக் கூடிய பொறுப்பு அவை முன்னவருக்கு உண்டு. கேள்விகளைத் தள்ளிப்போடுவது நோக்கமாக இருந்தால், தலைவர் தலையிட்டுத் தவிர்க்க முடியும். கேள்வி தவிர்க்கும் முயற்சி வரவில்லை. விளக்கம் பெறவேண்டுமென்றால், முன்னவரிடம் பெற முடியும். அதற்கு எவ்விதத் தடையும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில நேரங்களில் சட்டப் பேரவையில் இருக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. அதனால்தான் இரண்டு அவையிலும் ஏக காலத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. மேலும் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசியதற்குப் பிறகு, அவர்களுக்கு வந்துள்ள கேள்விகளை இப்போதுதான் வாங்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தொடர்ந்து அடுத்த கூட்டங்களில் கேள்விகளை எடுத்துக்கொள்வார்கள். முக்கியமான கேள்விகளுக்கு முதலமைச்சர் அவர்களே இங்கு வந்து விடையளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.